தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகம்

2022

ஆண்டறிக்கை

உள்ளடக்கம்

	பக்கம்
அறிமுகம்	1
நோக்கு	1
செயற்பணி	1
குறிக்கோள்	1
நிறுவனத்தின் பணிகள்	1
தலைவர் உட்பட பணிப்பாளர் சபை	2
கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு	2
நிறுவனத்தின் சிரேட்ட முகாமைத்துவம	2
நிறுவனத்தின் தகவல்	2
தலைவரின் செய்தி	3
2022 ஆம் ஆண்டின் செயலாற்றுகை	5-14
கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை	14-21
கணக்காய்வு விசாரணைகளுக்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்	22-24
2022 ஆம் ஆண்டின் செயலாற்றுகையை மேம்படுத்தும் பொருட்டு பின்பற்றப்பட்ட நடவடிக்கைகள்	25
இறுதிக் கணக்குகளின் அறிக்கை	
நிதி நிலைமைக் கூற்று	26
நிதிச் செயலாற்றுகை அறிக்கை	27
உரிமை மாற்றல் கூற்று	28
காசுப் பாய்ச்சல் கூற்று	29
கணக்கீட்டுக் கொள்கை மற்றும் கணக்குகளுக்கான குறிப்புகள்	30-44
உண்மையான மற்றும் வரவுசெலவுச் சீராக்கக் கூற்றுக்கள்	45-49
கிளை அலுவலகங்களின் இலாபம்	50

தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகம்

1. அறிமுகம்

வரையறுக்கப்பட்ட சவுத் வெஸ்டர்ன் பேருந்துக் கம்பனிக்குச் சொந்தமாக இருந்து அதன் ஊழியர்களுக்கு மருத்துவ வசதிகளை வழங்குவதற்கான மருத்துவ நிலையமொன்றாக இரத்மலானை டிபோ வளவில் அமைந்திருந்த இந்த நிறுவகம் 1958 ஆம் ஆண்டில் பேருந்துக் கம்பனி மக்கள்மயப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமாகியது. பேருந்து மக்கள்மயப்படுத்தப்பட்ட பின்னர் ''இ.போ.ச. மருத்துவப் பிரிவு'' எனும் பெயரில் இது அழைக்கப்பட்டது.

சேவைகளை விஸ்தரிக்கும் நோக்கில் இரத்மலானை டிபோ வளவில் அமைந்திருந்த மருத்துவ நிலையம், 1970 ஆம் ஆண்டில் இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான நுகேகொடை, ஹைலெவல் வீதி, இலக்கம் 170 எனும் இடத்திற்குக் கொண்டுவரப்பட்ட அதேவேளையில், தற்போது ''தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகம்'' எனும் பெயரில் போக்குவரத்து அமைச்சின் கீழ் சுயமாக வருமானத்தை ஈட்டும் அரச நியதிச் சட்டமுறை நிறுவகமொன்றாக தொழிற்படுகின்றது.

1997 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகச் சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்டுள்ளன. நிறுவகத்தின் அடிப்படை நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு, 1999 ஆம் ஆண்டில் நுகேகொடை தலைமையகத்திலிருந்து ஆரம்பித்து தற்போது இருபத்தைந்து மாவட்டங்களிலும் வியாபித்துள்ள கிளை அலுவலக வலையமைப்பைக் கொண்டுள்ளது.

2. நோக்கு

"ஒவ்வொரு வழிச்செலுத்துகைக்குப் பின்னாலும் ஆரோக்கியமான சாரதியொருவரை அமர்த்துதல்."

3. செயற்பணி

"இலங்கையினுள் போக்குவரத்து மருத்துவத் துறையில் முன்னோடியாக இருந்து சகல சாரதி அனுமதிப்பத்திர விண்ணப்பதாரர்களுக்கும் தரமான மருத்துவ பரிசோதனை மேற்கொண்டு உடல், உள தகுதி பற்றிய சான்றிதழை வழங்குதல்."

4. குறிக்கோள்

- சகல சாரதி அனுமதிப்பத்திர விண்ணப்பதாரிகளினதும் உடல், உள தகுதியைப் பரிசோதனை செய்தல்.
- வழங்கப்படுகின்ற மருத்துவச் சான்றிதழின் தரத்தையும் பாதுகாப்பு உபாயத் திட்டத்தையும் மேம்படுத்துதல்.
- சிறந்த மனிதவள முகாமைத்துவத்தினூடாக சேவையின் தரத்தை அடைந்துகொள்ளுதல்.

5. நிறுவனத்தின் பிரதான பணிகள்

கனரக வாகன சாரதிகள், மென் ரக வாகன சாரதிகள், சாரதி பயிற்சி பாடசாலை மூலம் பயிற்சியை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்ப்புள்ள சகலரும், கௌரவ நீதி மன்றம், இலங்கை போக்குவரத்து சபை, பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை உள்ளிட்ட ஏனைய நிறுவனங்களின் மூலம் அனுப்பப்படுகின்ற சாரதிகளின் மருத்துவ பரிசோதனையை மேற்கொண்டு அவர்களின் தகுதியை சான்றுப்படுத்தி மருத்துவ சான்றிதழ் வழங்குவது இந்த நிறுவனத்தின் பிரதான பணியாகும்.

தலைவர் உட்பட பணிப்பாளர் சபை

தலைவர்/பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர்	-	டாக்டர். திரு. எஸ்.ஏ.கே. கமகே
பணிப்பாளர் சபை உறுப்பினர்கள்	-	திருமதி. வீ.பீ.சீ.ஆர். அபேகுணவர்தன
		திரு. சசி வெல்கம (2022.05.26 வரை)
		திரு. எச்.எச்.பீ. கிரிஎல்ல (2022.10.28 முதல்)
		திரு. பீ.வீ.பி.பீ. சிசிரநந்தன (2022.09.22 முதல்)
		திரு. இந்திக ஹப்புகொட (2021.07.16 முதல்)
		திரு. பீ.டபிள்யு.சீ.எல். பனாபிட்டிய
		டாக்டர் திரு. எஸ்.கே.பீ. தரங்க (2022.10.17 வரை)
		டாக்டர் பிரசாத் ரணவீர (2022.10.17 வரை)
		டாக்டர் திருமதி. ஜீ.என். பொன்சேகா (2022.08.10 முதல்)
		திரு. நிலான் மிரெண்டா (2022.05.26 முதல்)
		திருமதி. எம்.ஏ.கே.டீ. கமகே (2022.09.01 வரை)
		திரு. சுனில் புஞ்சிஹேவா (2022.10.17 வரை)
பணிப்பாளர் சபையின் செயலாளர்	-	திருமதி. கே.ஜீ.ஐ.எஸ்.பெரேரா (2022.03.21 வரை)
		திருமதி. எச்.எம்.கே.சீ. ஹேரத் (2022.03.22 முதல்)

பணிப்பாளர் சபைக் கூட்டம் - மீளாய்வு வருடத்தில் பதினொரு சபைக் கூட்டங்கள் இடம்பெற்றன.

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுஉறுப்பினர்கள்

தலைவர்	-	திரு. பீ.வீ.பி.பீ. சிசிரநந்தன
		திருமதி. எம்.ஏ.கே.டீ. கமகே (2022.03.01 வரை)
உறுப்பினர்கள்	-	திருமதி. வீ.பீ.சீ.ஆர். அபேகுணவர்தன
உறுப்பினர்கள்	-	திரு. நிலான் மிரெண்டா
கண்காணிப்பாளர்	-	திரு. டபிள்யு.எம்.எஸ்.பீ. விஜேரத்ன
கண்காணிப்பாளர்	-	திரு. பீ.கே.எம்.டீ. குணசேன
பணிப்பாளர் (நிருவாகம்/ நிதி)	-	ரீ.ஜீ. லக்ஷ்மன்
பிரதான மருத்துவ உத்தியோகத்தர்	-	டாக்டர் திருமதி. கே.எஸ்.எம். சமரசேகர
கணக்காய்வாளர்	-	திரு. எஸ்.பீ.ஏ.எஸ். திஸாநாயக்க
உள்ளக கணக்காய்வாளர்	-	திரு. எல்.எம். ஜயலத்
பணிப்பாளர் (நிருவாகம்)	-	திரு. எம்.டீ.சீ.டீ. பெரேரா
நிருவாக உத்தியோகத்தர்	-	திருமதி. எச்.எச்.ஆர்.கே. ஹேரத்
செயலாளர்	-	திருமதி. எச்.எம்.சீ.கே. ஹேரத்

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டம் - மீளாய்வு வருடத்தில் நான்கு குழுக் கூட்டங்கள் இடம்பெற்றன.

நிறுவனத்தின் சிரேட்ட முகாமைத்துவம்

பணிப்பாளர் (நிருவாகம்/ நிதி)	-	திரு. ரீ.ஜீ. லக்மன்
பிரதான மருத்துவ உத்தியோகத்தர்	-	டாக்டர் திருமதி. கே.எஸ்.எம். சமரசேகர
கணக்காளர்	-	திரு. எஸ்.பீ.ஏ.எஸ். திஸாநாயக்க
உள்ளக கணக்காய்வாளர்	-	திரு. எல்.எம். ஜயலத்
சட்ட உத்தியோகத்தர்/பணிப்பாளர் சபையின் செயலாளர்	-	திருமதி. எச்.எம்.சீ.கே. ஹேரத்
பணிப்பாளர் (நிருவாகம்)	-	திரு. எம்.டீ.சீ.டீ. பெரேரா
நிருவாக உத்தியோகத்தர்	-	திருமதி. எச்.எச்.ஆர்.கே. ஹேரத்

நிறுவனத்தின் தகவல்

நிறுவனத்தின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகதொலைபேசி இல	- 0112-812796
அலுவலக தொலைநகல் இல.	- 0112-812795
அலுவலக மின்னஞ்சல் முகவரி	- ntmi@sltnet.lk
அலுவலக இணையத்தள முகவரி	- www.ntmi.lk

தலைவரின் செய்தி

அரச நியதிச் சட்டமுறை நிறுவனம் என்ற வகையில் 1997 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகத்தின் சட்டத்திற்க அமைவாக தொழிற்படுகின்ற இந்த நிறுவனத்தின் பிரதான நோக்கம் இலங்கையில் இருக்கின்ற கனரக வாகன, மென்ரக வாகன சாரதிப் பாடசாலைகளிலிருந்து பயிற்சியை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கின்றவர்கள், கௌரவ நீதிமன்றம், இலங்கை போக்குவரத்து சபை, வீதிப் போக்குவரத்து பயணிகள் அதிகாரசபை உள்ளிட்ட ஏனைய வெளி நிறுவனங்களின் மூலம் அனுப்பப்படுகின்ற சாரதிகளின் சுகாதார நிலைமை பற்றிய உயர்வான மற்றும் தரமான மருத்துவப் பரிசோதனையை மேற்கொண்டு அவர்களின் தகுதியை சான்றுப்படுத்தி மருத்துவச் சான்றிதழை வழங்குவதாகும். இதற்காக தலைதமை அலுவலகம் மற்றும் 25 கிளை அலுவலகங்கள் நாடுபூராவும் அமைக்கப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் இலங்கையில் இருக்கின்ற சகல சாரதிகளினதும் ஆரோக்கிய நிலையை சிறந்த மட்டத்தில் பேணுவதற்கு செயல்படுகின்ற அதே வேளையில், சேவைநாடிகளுக்கு வழங்குகின்ற சேவையின் தரத்தை மேம்படுத்துவதற்கும், பதவியினரின் முன்னேற்றத்தையும் அவர்களுக்குள் நேர்மறையான மனப்பாங்கை ஏற்படுத்துவதற்கும் நிறுவகத்தின் குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கும் தேவையான உபாயரீதியான திட்டங்களை பின்பற்றுவதனூடாக வழங்கப்படுகின்ற சேவையின் தரத்தில் மாற்றத்தை ஏற்படுத்தினேன்.

தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகத்தின் தலைவர் என்ற வகையில் இந்த நிறுவகத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், 2022 ஆம் ஆண்டில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்திற்கு பங்களிப்பை வழங்கியுள்ள அந்த வருடத்தில் இருந்த பணிப்பாளர் சபை, நிறுவகத்தின் சிரேஷ்ட முகாமைத்துவம் மற்றும் ஏனைய பதவியினர்களுக்கு நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்ற அதேவேளையில், நிறுவகத்தின் தலைவர் என்ற வகையில் தொடர்ந்தும் இந்த நிறுவகத்தின் மூலம் சேவைநாடிகளுக்கு நினைத்திறன் மிக்க மற்றும் தரமான சேவைகளை வழங்குவது குறித்து கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்.

டாக்டர் சவேந்திர கமகே
தலைவர்/ பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர்
தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகம்

2022 ஆம் ஆண்டின் செயலாற்றுகை

2022 ஆம் ஆண்டின் டிசம்பர் மாத இறுதி வரை சாரதி அனுமதிப்பத்திர விண்ணப்பதாரிகளின் மருத்துவ பரிசோதனைகளை மேற்கொண்டு மருத்துவ சான்றிதழ் வழங்குவது பற்றிய பகுப்பாய்வுகள் பின்வருமாறு.


2022 டிசம்பர்31 ஆம் திகதி வரை

கிளை	மேற்கொள்ளப் பட்ட மொத்த மருத்துவப் பரிசோதனை களின் எண்ணிக்கை	சுகாதாரக் காரணிகளின் அடிப்படையில் மருத்துவப் பரிசோதனையில் தற்காலிகமாக சித்தியடையாத சாரதிகள் மற்றும் சாரதி அனுமதிப் பத்திர விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை	தற்காலிகமாக சித்தியடையாத சாரதிகள் மற்றும் சாரதி அனுமதிப் பத்திர விண்ணப்பதாரர்களின் முன்னெற்றம்
தலைமை அலுவலகம்	118,105	7,472	6.33%
வேரஹர	75,400	7,251	9.62%
கம்பஹா	69,230	5,039	7.28%
களுத்துறை	37,419	2,098	5“61%
கண்டி	52,664	3,887	7.38%
மாத்தறை	28,573	1,558	5.45%
காலி	35,926	3,008	8.37%
ஹம்பாந்தோட்டை	34,170	2,051	6.00%
குருணாகல்	74,492	5,304	7.12%
அநுராதபுரம்	37,784	1,929	5.11%
இரத்தினபுரி	25,835	1,161	4.49%
பதுளை	21,529	1,376	6.39%
மொனராகலை	17,456	1,457	8.35%
யாழ்ப்பாணம்	25,810	1,222	4.73%
மன்னார்	4,498	307	6.83%
வவுனியா	10,486	571	5.45%
கிளிநொச்சி	7,774	352	4.53%

மட்டக்களப்பு	23,100	1,172	5.07%
திருகோணமலை	17,337	1,447	8.35%
அம்பாறை	21,187	1,794	8.47%
மாத்தளை	19,922	1,276	6.40%
கேகாலை	25,822	2,017	7.81%
முல்லைதீவு	4,066	393	9.67%
நுவரெலியா	14,522	971	6.69%
பொலநறுவை	16,956	1,693	9.98%
புத்தளம்	27,243	1,835	6.74%
மொத்தம்	847,306	58,641	6.92%

2022 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை மேற்கொள்ளப்பட்ட மொத்த மருத்துவ பரிசோதனைகளின் எண்ணிக்கை 847,306 ஆகும். அதன் மூலம் 2022 டிசம்பர் 31 ஆம் திகதி வரை சுகாதார காரணிக-ளின் அடிப்படையில் சாரதி தொழிலில் ஈடுபடுத்துவதற்குத் தகுதியற்றவர்கள் என மருத்துவர்களினால் தீர்மானிக்கப்பட்டுள்ளவர்களின் அளவு 6.92% ஆகும். அதாவது பரிசோதனைகளுக்காகத் தோற்றிய விண்ணப்பதாரர்களில் ஒவ்வொரு 100 நபர்களுக்கும் 6 இற்கும் 7 இற்கும் இடைப்பட்ட எண்ணிக்கையிலானவர்கள் சுகாதார காரணிகளின் அடிப்படையில் வாகனங்களைச் செலுத்துவதற்குத் தகுதியற்றவர்கள் என உறுதிப்படுத்தப்பட்டுள்ளனர்.

மருத்துவப் பரிசோதனைகளை மேற்கொள்ளும் போது அடையாளங்காணப்பட்ட நோய்கள் பின்வருமாறு.




அடையாளங் காணப்பட்ட நோய்களில் கூடுதலான சதவீதத்திற்கு காரணம் கண் பார்வைக் குறைபாடு என்பது மேலே காட்டப்பட்டுள்ள வரைபின் மூலம் தெளிவாகின்றது.

2022 ஆம் ஆண்டில் பொலிஸ் திணைக்களத்தின் மூலமும் கௌரவ நீதிமன்றத்தின் மூலமும் பல்வேறு குற்றச் செயல்களின காரணமாக மருத்துவப் பரிசோதனைகளை மேற்கொள்வதன் தேவைப்பாட்டின் அடிப்படையில் அனுப்பப்பட்ட சாரதிகளில் 6 இற்கும் 7 இற்கும் இடையிலான சதவீதத்தினர் வாகனம் செலுத்துவதற்கு தகுதியான உடல் அல்லது உள தகுதியைக் கொண்டவர்களல்ல என அடையாளங் காணப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், சுகாதார ரீதியில் சாரதிகள் வாகனத்தை செலுத்துவதற்கு தகுதியற்றவர்கள் என சான்றுப்படுத்துவதன் மூலம் வீதி விபத்துக்களைக் குறைப்பதற்கு எமது நிறுவனம் நேரடியாகப் பங்களிப்புச் செய்யப்பட்டுள்ளது.

2022 டிசம்பர் 31 ஆம் திகதி வரை			2021 டிசம்பர் 31 ஆம் திகதி வரை		
சேவை நாடிகளின் எண்ணிக்கை	மருத்துவப் பரிசோதனைக்கு தோற்றிய சந்தர்ப்பத்தில் வெற்றி அடையாத வர்களின் எண்ணிக்கை	வெற்றி அடையாத சேவை நாடிகளின் சதவீதம்மு	சேவை நாடிகளின் எண்ணிக்கை	மருத்துவப் பரிசோதனைக்கு தோற்றிய சந்தர்ப்பத்தில் வெற்றி அடையாத வர்களின் எண்ணிக்கை	வெற்றி அடையாத சேவை நாடிகளின் சதவீதம்மு
3,989	250	6.27	3,152	139	4.41

4.1. மருத்துவச் சான்றிதழ்கள் வழங்குவதில் முன்னேற்றம்

2015 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை நடத்தப்பட்ட மருத்துவப் பரிசோதனைகளின் எண்ணிக்கை விளக்கப்படம் ஒன்றின் மூலம் காட்டப்படுகின்ற அதேவேளையில் கோவிட் - 19 தொற்றுநோய் நிலைமையின் போது கூட, 2019 உடன் ஒப்பிடும்போது 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் மருத்துவப் பரிசோதனைகளில் கணிசமாக அதிகரிப்பைக் காட்டுகின்ற அதேவேளையில் 2022 ஆம் ஆண்டில் நிலவிய பிரச்சினைக்குரிய நிலைமையிலும்கூட 847,306 மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.



கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் ஆகியவற்றில் முன்னேற்றம்


வசதிகளை விரிவுபடுத்தும் கருத்திட்டம் மற்றும் வசதிகளை விரிவுபடுத்த முடியாத கட்டடங்கள் உள்ள கிளைகளில் அதற்கு பதிலாக புதிய இடங்களை வழங்கும் கருத்திட்டம

இதன் கீழ் சேவைநாடிகளுக்கு வினைத்தின்மிக்க மற்றும் திருப்திகரமான சேவைகளை வழங்கும் நோக்கத்துடன் பின்வரும் கருத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகத்தின் களுத்துறை கிளை 2022.03.15 ஆம் திகதியன்று பிரிதொரு இடத்தில் தாபிக்கப்பட்டமை.




- மாதாந்த வாடகை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட திருகோணமலை கிளை அலுவலகத்தின் உள்ளக கட்டமைப்பை மாற்றியமைத்து நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகளை மேற்கொண்டு 2022 மே மாதம் 02 ஆம் திகதியன்று பிரிதொரு இடத்தில் தாபிக்கப்பட்டமை.




- தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகத்தின் மட்டக்களப்பு கிளை 2022.07.07 ஆம் திகதியன்று பிரிதொரு இடத்தில் தாபிக்கப்பட்டமை.






- தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகத்தின் கிளிநொச்சி கிளையை மாவட்ட செயலகத்திற்கு உள்ளேயே உள்ள கட்டடம் ஒன்றில் நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகளை மேற்கொண்டு 2022.08.02 ஆம் திகதியன்று தாபிக்கப்பட்டமை.





- தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகத்தின் மாத்தறைக் கிளை 2022.09.02 ஆம் திகதியன்று பிரிதொரு இடத்தில் தாபிக்கப்பட்டமை.





- தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகத்தின் வவுனியா கிளையை மாவட்ட செயலகத்திற்கு உள்ளேயே உள்ள கட்டடம் ஒன்றில் தாபிப்பதற்காக நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகளை தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.




- தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகத்தின் காலி கிளையை இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான கிந்தொட்டையில் அமைந்துள்ள டிப்போ வளவிலுள்ள கட்டடம் ஒன்றில் தாபிப்பதற்காக அது தொடர்பான நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.




- நுகேகொடை தலைமை அலுவலகத்தில் தற்போது காணப்படுகின்ற சாரதி மற்றும் பாதுகாப்பு ஓய்வு அறைக் கட்டடம் மிகவும் பாழடைந்த நிலையில் காணப்படுகின்றபடியினால் இந்தக் கட்டடத்தின் பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.




- வருகின்ற சேவைநாடிகளுக்கு மிகவும் வினைத்திறன்மிக்க மற்றும் தரமான சேவைகளை வழங்கும் நோக்கத்துடன் பின்வரும் அலுவலகங்களுக்கு கதிரைகளை கொள்வனவு செய்தமை.

கிளை	கொள்வனவு செய்யப்பட்ட கதிரைகளின் எண்ணிக்கை
நுவரெலியா	25
மட்டக்களப்பு	25
இரத்தினபுரி	30
மாத்தளை	13
பொலன்னறுவை	50
குருநாகல்	25
திருகோணமலை	25
மாத்தறை	50
களுத்துறை	60
வேறஹெர	15





நடமாடும் சேவைகளை நடைமுறைப்படுத்துதல்

- தென் மாகாணத்தின் தெனியாய தேர்தல் தொகுதியில் பிரதேச நடமாடும் நிகழ்ச்சி திட்டத்திற்காக 2022 மார்ச் மாதம் 19 மற்றும் 20 ஆகிய இரண்டு தினங்களிலும் நடைமுறைப்படுத்தப்பட்டது. இதன்போது 612 சேவைநாடிகளுக்கு மருத்துவ சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. சம்பாதிக்கப்பட்ட வருமானம் ரூபா 489,600 ஆகும்.



- தியத்தலாவையில் உள்ள இலங்கை இராணுவ கல்வி கல்லூரியில் சுமார் 250 உத்தியோகத்தர்களுக்கு 2022.06.26 ஆம் திகதியன்று புதிய சாரதி அனுமதிப் பத்திரங்களை பெற்றுக் கொள்வதற்கும் புதுப்பித்துக்கொள்வதற்கும் மருத்துவ சான்றிதழ்களை வழங்கும் நடமாடும் மருத்துவ முகாம் ஒன்றை நடாத்தியமை.





- 2022.11.17 ஆம் திகதியன்று மாத்தளையில் 11 பிரதேச செயலகப் பிரிவுகளை உள்ளடக்கும் விதமாக மாத்தளை மாவட்டத்தில் இடம்பெற்ற நடமாடும் சேவையை மாத்தளைக் கிளையில் நடாத்தியமை.

- வட மாகாண சபையை உள்ளடக்கும் விதமாக 2022 ஒக்டோபர் மாதம் 22 மற்றும் 23 ஆகிய தினங்களில் இரண்டுநாள் நடமாடும் சேவை நிகழ்ச்சித் திட்டமொன்றை நடைமுறைப்படுத்தியமை.

- மாத்தறை மாவட்டத்தில் அக்குரஸ்ஸ பிரதேச செயலகப் பிரிவுக்கு உரித்தான குறைந்த வசதிகளைக் கொண்ட கெட்டன்வில சமுர்திவலயத்தில் 15 கிராமங்களை மையப்படுத்தி 2022 டிசம்பர் மாதம் 11 ஆம் திகதியன்று மாறை/ மகிதுவ கனிஷ்ட வித்தியாலத்தில் நடமாடும் சேவை நிகழ்ச்சித் திட்டமொன்றை நடைமுறைப்படுத்தியமை.





பதவியினர் வெற்றிடங்களை நிரப்பி நேர்மறையான மனப்பாங்கை ஏற்படுத்துதல்

நிறுவனத்தின் மனிதவலு மதிப்பீட்டிற்கு அமைவாக வெற்றிடமாக இருந்த பதவியணியை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.


புதிய நியமனங்கள் (2022.03.15 இல் உள்ளவாறு)	
உதவிப் பணிப்பாளர் (நிருவாகம்)	01
உள்ளகக் கணக்காய்வாளர்	01
பணிப்பாளர் சபை செயலாளர்/ சட்ட உத்தியோகத்தர்	01

2022 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஏனைய பணிகள்

- கிளை அலுவலகங்களுக்கு விரல் அடையாள இயந்திரத்தைப் பொருத்துதல்

  ஊழியர்கள் உரிய நேரத்திற்கு சேவைக்கு அறிக்கையிடுவது கட்டாயமானபடியினால் சேவைநாடிகளுக்கு வினைத்திறன்மிக்கதும் திருப்திகரமானதுமான சேவையை வழங்குவதற்காக விரல் அடையாள இயந்திரத்தை நவீனமயப்படுத்தி இற்றைப்படுத்தியமை.

- இதுவரை நிறுவனத்தில் பயன்படுத்தப்பட்ட மருத்துவப் படிவத்தை இற்றைப்படுத்துதல்.


Serial No. DMT/LV/12/ NTMI No: M.C.Type: LIGHT VEHICLE

ජාතික ප්‍රවාහන වෛද්‍ය ආයතනය
தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவகம்
NATIONAL TRANSPORT MEDICAL INSTITUTE

Ministry of Vehicle Regulation, Bus Transport Services and Train Compartments and Motor Car Industry

Medical Examination Report

Date of Examination:

NIC No: Passport No: License No:

Full Name:

Address:

Sex: Date of Birth: Age:

Declaration of Applicant;

Applicant's Signature

A. PHYSICAL EXAMINATION

(I) General Examination :

a) Height : Ft Inches cm BMI Weight : Kg.

b) Any skeletal / limb deformities : Present Absent

c) Partial or complete amputation of finger or limbs

Remarks :

d) VISION

Vision		Corrected Vision			
		Date Visited			
Right	6/	Right	6/	6/	6/
Left	6/	Left	6/	6/	6/

Vision Corrected by Squint

Spectacle

Contact Lenses

e) HEARING : Satisfactory Unsatisfactory Satisfactory with the aid

(II) Cardiovascular System :

a) Pulse : /min Regular Irregular


b) Blood pressure : mm. Hg

c) Heart murmurs : Present Absent

(III) Respiratory System : Any lung disease : Present Absent

(IV) Central Nervous System : Normal (V) Psychological status : Stable

NTMI


B. SPECIAL LABORATORY INVESTIGATIONS

a) .mg/dl b) Blood group

c) Chest X-ray / ECG :

REFERRAL BY MO (if necessary)

C. Recommendations of the Consultant / Technical Assessor (if any)

D. RECOMMENDATION OF THE MEDICAL OFFICER

I have medically examined Mr./Ms./Dr.

and certify that he/she is physically and mentally fit/unfit for driving of following category/s of vehicles on public highways.

						Recommended Number of Vehicle Categories
Motor cycles	A	All cars/dual purpose	B	Land vehicles	G	
Light motor cycles	A1	Tricycles/tricycle vans	B1	Hand tractors	G1	6

SPECIAL CONDITIONS :

- Must wear the spectacles/Contact Lenses while driving :
- Must wear the hearing aid while driving
- Periodic Medical Examination required :
  ▶ please make a note under the remarks.
- Regular treatment required :

Remarks if any :

Medical Officer

Name & Stamp of the Medical Officer

Date of Issue :

- மருத்துவ சேவை கட்டணத்தை திருத்துதல்

  நாட்டில் நிலவுகின்ற நிலைமைக்கு அமைவாக நிறுவனத்தின் நிதி நிலைமையை நிலையாக பேணுவதற்காக பத்து வருடங்களுக்கு பின்னர், அதாவது 2022.08.08 ஆம் திகதியிலிருந்து மருத்துவ சேவை கட்டணத்தை திருத்துதல்.

- நடவடிக்கைமுறை கோவையை தயாரித்தல்

  நிறுவனத்தின் படிநிலையில் உயர் முகாமைத்துவ நிலையிலிருந்து கீழ் முகாமைத்துவ நிலை வரை தலைமை அலுவலகத்திலும் கிளை அலுவலகங்களிலும் சகல பதவியணி உறுப்பினர்களுக்கும் நிறுவனத்தின் நடவடிக்கைமுறை பற்றிய வழிகாட்டலொன்றை இதன்மூலம் வழங்கியுள்ளது.

- ஊழியர்களுக்கு இடமாற்றங்களை வழங்குதல்

  இதன்கீழ் ஊழியர்களின் கோரிக்கையை கவனத்தில் கொண்டு நிறுவனத்தில் உள்ள பெரும்பாலான ஊழியர்களுக்கு அவர்களில் வதிவிடத்திற்கு அண்மையிலுள்ள கிளை அலுவலகங்களுக்கு இடமாற்றங்களை வழங்குதல்.

- ஊழியர்களின் திறன்விருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்

  நிறுவனத்தின் ஊழியர்களை பயிற்சிநிகழ்ச்சித் திட்டங்களுக்கு அனுப்பி நிறுவனத்தின் மனிதவள அபிவிருத்தியினூடாக சேவைநாடிகளை திருப்திப்படுத்தக் கூடிய தரமான சேவையை வழங்குதல்.

சவால்கள் மற்றும் பிரச்சினைகள்

I. கிளை அலுவலகங்களுக்கு நிரந்தர கட்டடங்களை நிர்மாணித்தல்

பெரும்பாலான கிளை அலுவலகங்கள் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட தனியார் அல்லது அரசாங்கத்திற்கு சொந்தமான கட்டடங்களில்இயங்கி வருகின்றன. அதற்காக மாதமொன்றுக்கு இருபது இலட்சம் ரூபாவுக்கு கிட்டிய தொகை செலவாகிறது. அது வருடமொன்றுக்கு ரூபா 240 இலட்சத்திற்கு கிட்டிய பெறுமதியை பெறுகின்ற அதேவேளையில், அந்தப் பெறுமதி எதிர்வரும் காலங்களில் மேலும் அதிகரிக்கும்.

II. மின்பிறப்பாக்கி இயந்திரங்களை கொள்வனவு செய்தல்

பெரும்பாலான கிளை அலுவலகங்களுக்கு மின்பிறப்பாக்கி இயந்திரங்கள் வழங்கப்படவில்லை. பல்வேறு காரணங்களினால் மின்பிறப்பாக்கி இயந்திரங்களை கொள்வனவு செய்ய முடியவில்லை. எதிர்காலத்தில் இது குறித்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

III. நிறுவனத்திற்கு நிரந்தர மருத்துவ உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்வதிலுள்ள சிரமங்கள்

நிரந்தர மருத்துவ உத்தியோகத்தரின் அடிப்படைச் சம்பளம் சுகாதார அமைச்சின் மருத்துவ உத்தியோகத்தருக்கு சமனான மட்டத்தில் காணப்படுகின்ற போதிலும், கொடுப்பனவுகள் குறைவாக உள்ளபடியினால் மாதாந்த வேதனம் மிகவும் கீழ் மட்டத்தில் காணப்படுகின்றது. பயிற்சி வருடத்தை பூர்த்திசெய்கின்ற சகல மருத்துவர்களுக்கும் சுகாதார அமைச்சில் நியமனம் கிடைக்கின்றபடியினால் அந்த உத்தியோகத்தர்களுக்கு கிடைக்கின்ற சம்பளத்தையும் பார்க்க கவர்ச்சிகரமான சம்பளம் எமது நிறுவனத்தின் உத்தியோகத்தர்களுக்கு கிடைக்காதபடியினால் மருத்துவர்கள் இந்த நிறுவனத்தில் சேவையில் இணைவதற்கு தயக்கம் காட்டுகின்றனர். மேலும், தொழிலில் காணப்படுகின்ற ஒரே மாதிரியான தன்மை மருத்துவர்களுக்கு உள்ள சவாலாக காணப்படுகின்ற அதேவேளையில், உயர்கல்விக்கு வரையறைகள் இருப்பதன் காரணமாக பயிற்சியை நிறைவு செய்த மருத்துவ உத்தியோகத்தர்கள் இந்த நிறுவனத்திற்கு வருவதற்கு விருப்பமின்மையை காட்டுகின்றனர்.

IV. ஊழியர்களின் சம்பளங்களைத் திருத்துதல் சம்பந்தமான பிரச்சினைகள்

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மூலம் சம்பளங்கள் மற்றும் விசேட கொடுப்பனவுகளுக்கான அனுமதியைப் பெற்றுக்கொள்வதில் உள்ள சிரமங்கள் காரணமாக ஊழியர்களின் நன்மைகளை அதிகரிப்பது தொடர்பில் பிரச்சினைகள் எழுந்துள்ளன. ஏனைய அரச நிறுவனங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் சபைகள் ஆகியவற்றுக்கு அமைவாக இலாபத்தை பெறுகின்ற நிறுவனமாக இருக்கின்ற போதிலும், இந்த நிருவகத்தின் உத்தியோகத்தர்களினதும் ஊழியர்களினதும் சம்பவங்களும் வரப்பிரசாதங்களும் அவ்வளவு கவர்ச்சிகரமானதாக இல்லாதபடியினால் அதுபற்றி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

சீஓவீ/டீ/என்ரீஎம்ஐ/எவ்ஏ/01/2022/13 2023மே31

தலைவர்

தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகம்

தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகத்தின் 2022 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவுற்ற வருடத்திற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்டரீதியான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவை பற்றிய2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை

.....

மேற்குறிப்பிட்ட அறிக்கை இத்துடன் அனுப்பப்பட்டுள்ளது.

டளிள்யு.பீ.சீ. விக்ரமரத்ன

கணக்காய்வாளர் அதிபதி

பிரதி: 1. செயலாளர் - போக்குவரத்துஅமைச்சு

2. செயலாளர் - நிதி அமைச்சு

சீஓரீ/டீ/என்ரீஎம்ஐ/எவ்ஏ/01/2022/13

2023 மே 29

தலைவர்

தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகம்

தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகத்தின் 2022 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவுற்ற வருடத்திற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்டரீதியான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவை பற்றிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை

---

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழிவுள்ள அபிப்பிராயம்

தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகத்தின் 2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு நிதி நிலைமைக் கூற்றுக்கள் மற்றும் அன்றைய தினத்தில் முடிவுற்ற வருடத்திற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்றுக்கள், உரிமை மாற்றல் கூற்றுக்கள்மற்றும் அன்றைய தினத்துடன் முடிவுற்ற வருடத்திற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கு உரிய குறிப்புகள், சுருக்கமான முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளைக் கொண்டுதாக 2022 டிசம்பர் 31ஆம் திகதியுடன் முடிவுற்ற வருடத்திற்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு சட்டத்தின் 154(1) ஆம் பிரிவுடன் திருத்தி வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது கட்டளையின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டுள்ளது. அரசியலமைப்பு சட்டத்தின் 154(6) ஆம் பிரிவின் பிரகாரம் எனது அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையில் முனைப்பழிவுள்ளஅபிப்பிராயத்திற்கான அடிப்படை என்ற பகுதியில் மேலும் விவரிக்கப்பட்டுள்ள விடயங்கள் மூலமான தாக்கங்கள் தவிர்ந்த நிறுவகத்தின் நிதிக் கூற்றுக்களினூடாக 2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு நிதி நிலைமை கூற்றுக்கள் மற்றும் அன்றைய தினத்தில் முடிவுற்ற வருடத்திற்கான அதன் நிதிச் செயற்பாடுகள் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன இலங்கை அரச துறை கணக்கீட்டு தரங்களுக்கு இணங்கியதாக உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையொன்றை எடுத்துக்காட்டுகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழிவுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) அரச துறை கணக்கிட்டுத் தரங்கள் இலக்கம் 01 இல் 4.8 ஆம் பிரிவின் பிரகாரம் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் ஒன்றுக்கொன்று ஈடுகட்டி நிதிக்கூற்றுக்களில் காட்டக் கூடாது. அவ்வாறு இருந்த போதிலும், வங்கி நிலுவைகளுக்கு உரிய ரூபா 13,883,347 தொகை பற்று மற்றும் வரவு நிலுவைகள் ஒன்றுக்கொன்று ஈடுகட்டி நிதிக்கூற்றுகளில் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வு வருடத்திற்கு உரிய கிடைக்க வேண்டிய நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபாய் 6,981,370 இனால் கூடுதலாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(இ) நிறுவனத்தின் தேய்மானக் கொள்கையின் பிரகாரம்,மீளாய்வு வருடத்தில் மூலதனமாக்கப்பட்ட ரூபா 10,843,201 தொகை கட்டடங்களுக்குரியதாக ரூபா 271,080 தேய்மானத்தின் பொருட்டு ஏற்பாட்டு கணக்குகளில் செய்திருக்கவில்லை.

(ஈ) மீளாய்வு வருடத்தின் நிதிக் கூற்றுகளுக்கு அமைவாக,ரூபா 9,190,238 தொகை இலங்கை போக்குவரத்து சபையிடமிருந்து கிடைக்க வேண்டியதாக காட்டப்பட்டிருந்த போதிலும், இலங்கை போக்குவரத்து சபையின் நிதிக் கூற்றுகளில் தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகத்திற்கு செலுத்த வேண்டியது என்பதாக தொடர்புடைய நிலுவை காட்டப்பட்டிருக்கவில்லை.

இலங்கை கணக்காய்வுத் தரங்களுக்கு இணங்கியதாக நான் கணக்காய்வினை மேற்கொண்டேன். அந்த கணக்காய்வுத் தரங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விவரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழிவுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையொன்றைவழங்கும் பொருட்டு என்னால் பெறப்பட்டுள்ள கணக்காய்வுச் சாட்சிகள் போதுமானதும் பொருத்தமானதும் என்பது எனது நம்பிக்கை ஆகும்.

1.3 நிறுவகத்தின் 2022 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கையில் உள்ளடங்கியுள்ள ஏனைய தகவல்கள்

இந்த கணக்காய்வு அறிக்கையின் திகதிக்குப் பின்னர் எனக்கு வழங்குவதற்கு எதிர்பார்க்கின்ற நிறுவனத்தின் 2022 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கையில் உள்ளடங்கியுள்ள போதிலும் நிதிக் கூற்றுக்கள் மற்றும் அதுபற்றிய எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடங்காத தகவல்கள், ஏனைய தகவல்கள் என்பதை குறிக்கும். இந்த ஏனைய தகவல்களுக்காக முகாமைத்துவம் வகைகூறுதல் வேண்டும்.

நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமான எனது அபிப்பிராயத்தின் மூலம் ஏனைய தகவல்கள் உள்ளடக்கப்படுவதில்லை என்பதுடன், நான் அது பற்றி எந்தவொரு விதத்திலும் சான்றுப்படுத்துதல் ஒன்றையோ அல்லது அபிப்பிராயம் ஒன்றையோ தெரிவிப்பதில்லை.

நிதிக்கூற்றுக்கள் பற்றிய எனது கணக்காய்வு தொடர்பில், எனது பொறுப்பு மேலே அடையாளம் காணப்பட்ட ஏனைய தகவல்களை பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும் போதுவாசித்தல் அத்துடன் அவ்வாறு செய்யும்போது ஏனைய தகவல்களை நிதிக் கூற்றுக்களுடன் அல்லது கணக்காய்வின் போது அல்லது வேறு விதமாக பெற்றுக்கொள்ளப்பட்ட எனது அறிவுக்கு அமைவாக அளவு சார்ந்த ரீதியில் பொருந்துவதில்லையா என்பதை கவனித்து பார்ப்பதாகும்.

நிறுவனத்தின் 2022 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கையை வாசிக்கும்போது, அதில் அளவுசார்ந்த விதத்தில் தவறுதலாக காட்டப்பட்டுள்ளது என்பதாக நான் தீர்மானிக்கும் பட்சத்தில், திருத்திக் கொள்வதற்காக நிர்வாகம் செய்யும் தரப்பினருக்கு அந்த விடயங்களைத் தெரிவித்தல் வேண்டும். தொடர்ந்தும் திருத்திக்கொள்ளாமல் தவறுதலாக காட்டப்பட்டிருக்குமாயின், அவை அரசியலமைப்புச் சட்டத்தின் 154(6) பிரிவின் பிரகாரம் என்னால் ஏககாலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கையில் உள்ளடக்கப்படும்.

1.4 நிதிக் கூற்றுக்கள் பற்றி முகாமைத்துவத்தினதும் நிர்வாகம் செய்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புகள்

இந்த நிதிக் கூற்றுகளை இலங்கை அரச துறை கணக்கீட்டு தங்களுக்கு இணங்கியதாக தயாரித்தல் மற்றும் நியாயமானதாக சமர்ப்பித்தல் அத்துடன் மோசடி அல்லது தவறுகளின்

காரணமாக ஏற்படக்கூடிய அளவுசார்ந்த தவறான கூற்றுக்கள் இன்றி நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய விதத்தில் தேவையான உள்ளக நிருவாகங்களை தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும்போது, நிறுவகத்தை தொடர்ச்சியாக நடாத்திச்செல்லும் ஆற்றலை தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாக இருக்கின்ற அதேவேளையில், முகாமைத்துவமானது நிறுவகத்தை மூடிவிடுவதற்கு அபிப்பிராயப்படுமாயின் அல்லது வேறு மாற்று வழிகள் இல்லாத போது செயற்பாடுகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாக இருந்தாலே தவிர தொடர்ச்சியான இருப்பின் அடிப்படையில் கணக்கு வைத்தல் மற்றும் மருத்துவ நிறுவனத்தின் தொடர்ச்சியான இருப்புக்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயல்முறை சம்பந்தமாக பரிசீலனை செய்யும் பொறுப்பு, நிருவாகம் செய்கின்ற தரப்பினரினால் வகிக்கப்படுகின்றது.

2018 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம், நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலத்திற்குரிய நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய விதத்தில் தமது வருமானம், செலவு, சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் சம்பந்தமாக உரிய விதத்தில் புத்தகங்களையும் அறிக்கைகளையும் பேணிவருதல் வேண்டும்.

1.5 நிதிக் கூற்று கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளர் அதிபதியின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய அளவு சார்ந்த பொய்யான கூற்றுக்கள் இல்லை என்பதாக நியாயமான உறுதிப்பாட்டை வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கிய கணக்காய்வாளரின் அறிக்கையை வெளியிடுதல் என்பன எனது நோக்கமாகும். நியாயமான சான்றுப்படுத்தல் உயர் மட்டத்திலான சான்றுப்படுத்தலாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு தரங்களில் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் அளவுசார்ந்தபொய்யான கூற்றுக்களை வெளிப்படுத்திக் கொள்கின்றது என்பதற்கான உறுதிப்படுத்தலாக இருக்காது. மோசடி மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது குழுவாகவோ,செல்வாக்கின் காரணமாக அளவுசார்ந்த பொய்யான கூற்றுகள் ஏற்படக்கூடிய அதேவேளையில்,இதில் அளவுசார்ந்த இந்த நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களினால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் குறித்த தாக்கத்தின் மீது தங்கியிருக்கின்றது.

இலங்கை கணக்காய்வு தரங்களில் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்ரீதியான தீர்மானத்தையும் தொழில்ரீதியானசந்தேகத்தையும் கொண்டதாக கணக்காய்வு செய்யப்பட்டுள்ளது.என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயதிற்கான அடிப்படையை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்படக்கூடிய அளவுசார்ந்த பொய்யான கூற்றுக்கள் ஏற்படும் அபாயத்தை அடையாளம் கண்டு, மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்கு ஏற்ற பொருத்தமான கணக்காய்வு நடவடிக்கைமுறைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது.தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய அளவு சார்ந்த பொய்யான கூற்றுக்களின் மூலம் ஏற்படக்கூடிய தாக்கத்திலும்பார்க்க மோசடியின் மூலம் ஏற்படக்கூடிய தாக்கம் வலுவானதாக இருப்பது அவை கூட்டாக

இணைந்து,போலியான ஆவணங்களை தயாரித்தல், வேண்டுமென்றே புறக்கணித்தல், தவறுதலாகக் காட்டுதல் அல்லது உள்ளக நிருவாகத்தை புறக்கணித்தல் போன்ற காரணிகளின் காரணமாக இருப்பதனாலேயாகும்.

- உள்ளக நிருவாகத்தின் உற்பத்தித்திறன் பற்றிய அபிப்ராயம் ஒன்றை தெரிவிக்கும் அபிப்பிராயமாக இல்லாத போதிலும்,சந்தர்ப்பத்திற்கு ஏற்ற பொருத்தமான கணக்காய்வு செயல்முறையை திட்டமிடும் பொருட்டு உள்ளக நிருவாகம் சம்பந்தமான புரிந்துணர்வு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளின்தகுதி,கணக்கீட்டு மதிப்பீடுகளும் நியாயமானதன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்துகைகளில் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகளின் காரணமாக நிறுவனத்தின் தொடர்ச்சியான இருப்பு பற்றி அளவுசார்ந்த நிச்சயமற்ற தன்மையொன்று இருக்கின்றதா என்பது பற்றி பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சாட்சிகளை அடிப்படையாகக்கொண்டு கணக்கீட்டுக்காக நிறுவனத்தின் தொடர்ச்சியான இருப்பு பற்றிய அடிப்படையை பயன்படுத்தும் ஏற்புடையதன்மை தீர்மானிக்கப்பட்டது. போதுமான நிச்சயமற்ற தன்மை இருக்கின்றது என நான் தீர்மானிப்பதாயின் நிதிக் கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்த வேண்டிய அதேவேளையில், அந்த வெளிப்படுத்தல்கள் போதுமானதாக இல்லையாயின் எனது அபிப்பிராயத்தை விபரித்தல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகளின் அடிப்படையில் தொடர்ச்சியாக நிலைத்திருப்பது முடிவடையக்கூடும்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்களும் நிகழ்வுகளும் பொருத்தமான மற்றும் நியாயமான விதத்தில் உள்ளடங்கி உள்ளது என்பதையும் வெளிப்படுத்தல்கள் உள்ளடங்கிய நிதிக் கூற்றுக்களில் மொத்தமான சமர்ப்பித்தல், பாராட்டப்பட்டது.

எனது கணக்காய்வில் அடையாளம் காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளக நிருவாக பலவீனம் மற்றும் ஏனைய விடயங்கள் பற்றி நிருவாகம் செய்கின்ற தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

2. ஏனைய சட்டரீதியான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடு பற்றிய அறிக்கை

2.1 2018 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்கத்தை கொண்ட கணக்காய்வு சட்டத்தில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளன.

2.1.1 எனது அறிக்கையில் முனைப்பழிவுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை என்ற பகுதியில் மேலும் விவரிக்கப்பட்டுள்ள விடயங்கள் மூலமான தாக்கங்கள் தவிர்ந்த, மற்றும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத்தை கொண்ட கணக்காய்வு சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கு அமைவாக, கணக்காய்வுக்குத் தேவையான சகல தகவல்களும் விளக்கங்களும் என்னால் பெற்றுக் கொள்ளப்பட்ட அதேவேளையில், எனது பரிசீலனைகளுக்கு தோன்றுகின்ற விதத்தில் உரிய நிதி அறிக்கை நிறுவனத்தினால் பேணப்பட்டிருந்தது.

2.1.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத்தை கொண்ட கணக்காய்வு சட்டத்தில் 6(1) (ஈ) (மை) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைவாக நிறுவகத்தின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய வருடத்துடன் இணங்கியதாகும்.

2.1.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத்தை கொண்ட கணக்காய்வு சட்டத்தின் 6(1) (ஈ) (�ை) பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைவாக முன்னைய வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளன.

2.2 பின்பற்றப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட சாட்சிகள் ஆகியவற்றின் அடிப்படையிலும் அளவுசார்ந்த விடயங்களில் வரையறைகளை மேற்கொண்டதிலும், பின்வரும் கூற்றுக்களின் அளவுக்கேனும் எதுவொன்றும் எனது கவனத்திற்கு உட்படவில்லை.

2.2.1 2018 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்கத்தை கொண்ட கணக்காய்வு சட்டத்தின் 12(ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கு அமைவாக நிறுவனத்தின் நிருவாக சபையின் யாரேனும் ஒரு உறுப்பினருக்கு நிறுவகம் சம்பந்தமான ஏதேனும் ஓர் உடன்படிக்கை சம்பந்தமாக நேரடியாகவோ அல்லது வேறு விதத்திலோ சாதாரண வியாபார நிலைமைக்கு புறம்பாக தொடர்பு இருக்கின்றது என்பதாக.

2.2.2 2018 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்கத்தைக் கொண்ட கணக்காய்வு சட்டத்தின் 12(ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைவாக பின்வரும் அவதானிப்புகள் தவிர்ந்த ஏதேனும் தொடர்புடைய எழுத்துமூலமான சட்டத்திற்கு அல்லது நிறுவகத்தின் நிருவாக சபையினால் வெளியிடப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்காது செயற்பட்டுள்ளது என்பதாக.

சட்டதிட்டங்களுக்கான/ ஏற்பாடுகளுக்கான	அவதானிப்புகள்
(அ) 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்கத்தைக் கொண்ட நிதி சட்டத்தின் 11 ஆம் பிரிவு	நிறுவனத்தினால் நிதியை முதலீடு செய்யும்போது நிதி அமைச்சரின்அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும், அவ்வாறுஅங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாமல் ரூபா 1,513,150,579 தொகை நிலையான வைப்புகளிலும் திறைசேரி உண்டியல்களிலும் முதலீடு செய்யப்பட்டிருந்தது.
(ஆ) நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 03/2022 எனும் இலக்கத்தைக் கொண்ட 2022.04.26 ஆம் திகதிய தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை	அரச செலவினத்தை கட்டுப்படுத்துவதற்கு உட்பட்டு அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கின் கீழ் பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படுகின்ற கடன் வசதிகளை 2022 ஆம் ஆண்டின் இறுதிவரை இடைநிறுத்தி வைக்குமாறு காட்டப்பட்டிருந்த போதிலும் அதற்கு முரணாக நிறுவனத்தின் பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு 2020 ஆம் ஆண்டில் ரூபா 464,328 தொகை இடர் கடனாக வழங்கப்பட்டிருந்தது.

(இ)	21/2015 ஆம் இலக்கத்தைக் கொண்ட 2015 ஆகஸ்ட் 19 ஆம் திகதிய பொது நிருவாகச் சுற்றறிக்கை மற்றும் தாபன விதிக் கோவையின் ஒழைை அத்தியாயத்தின் திருத்தப்பட்ட 13.2 மற்றும் 13.5 ஆம் உப பிரிவுகள்	உத்தியோகத்தரின் விருப்பத்தின்படி, ஒரு வருடத்திற்கான எந்த ஒரு பண்டிகைக்கும் ரூபா 10,000 வீதம் முற்பண தொகையை செலுத்தக் கூடியதாக இருக்கின்ற போதிலும் மருத்துவ நிறுவகத்தின் 228 ஊழியர்களுக்கு அந்த எல்லையைத் தாண்டி ரூபா 30,000 வீதம் பண்டிகை முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது.
(ஈ)	பெறுகை வழிகாட்டல் கோவை5.4.8 ஆம் பிரிவு	நிறுவனத்தின் நடவடிக்கைகளுக்கு தேவையானரூபா 31,415,000 தொகைக்கு மென்ரக மற்றும் கனரக வாகன மருத்துவப் படிவங்களை பெற்றுக்கொள்ளும் போது நூ ற்றுக்கு 10 சதவீத செயலாற்றுகை பாதுகாப்பு பெறப்பட்டிருக்கவில்லை.

2.2.3 2018 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்கதேசிய கணக்காய்வு சட்டத்தின் 12(ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைக்கு அமைவாகநிறுவனத்தின் அதிகாரம், பணிகள் மற்றும் செயற்பாடுகளுக்கு இணங்காதவாறு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பது.

2.2.4 2018 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்கதேசிய கணக்காய்வு சட்டத்தின் 12(ஐ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைக்கு அமைவாகநிறுவனத்தின் வளங்கள் சிக்கனமாக, வினைத்திறனாக மற்றும் உற்பத்தித்திறனாக கால எல்லைக்கள் தொடர்புடைய சட்டதிட்டங்களுக்கு இணங்கியதாக கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்படவில்லை என்பது.

2.3 ஏனைய விடயங்கள்

(அ) மீளாய்வு வருடத்தில் ரூபா 33,499,620 தொகை நூற்றுக்கு 5 மற்றும் 12 வட்டி வீதத்தின் கீழ் நிலையான வைய்ப்புக்களிலும் ரூபா 35,000,000 நூற்றுக்கு 9.85 வட்டி வீதத்தின் கீழும் திரைச்சேரி உண்டியல்களில் முதலீடு செய்யப்பட்டிருந்த அதேவேளையில் நிலவும் சந்தை சூழ்நிலையில் அதற்காக கூடுதலான வட்டி வீதத்தை கொண்ட முதலீடுகளை மேற்கொள்வதற்கு முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிறுவனத்தின் நடவடிக்கைகளுக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 75 மருத்துவர்கள் அனுமதிக்கப்பட்டிருந்த போதிலும், 10 மருத்துவர்கள் மாத்திரம் நிரந்தரமாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்த அதேவேளையில் 20 கிளை அலுவலகங்களுக்காக நிரந்தர அடிப்படையில் ஒரு மருத்துவரேனையும் ஆட்சேர்ப்புச் செய்யாமல் ஒப்பந்த அடிப்படையில் 37 மருத்துவர்களும் பகுதிநேர (Part time) அடிப்படையில் 98 மருத்துவர்களும் சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர்.

(இ) நிறுவனத்தின் கிளை அலுவலகத்தைத் தாபிப்பதற்காக அரசாங்கத்தின் கட்டிடங்களை பயன்படுத்தாமல் அல்லது நிரந்தர கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் வாடகை அடிப்படையில் பெறப்பட்டிருந்த தனியார் துறையின் கட்டடங்களுக்காக மீளாய்வு வருடத்தில் கட்டட வாடகையாகரூபா 31,437,501 செலுத்தப்பட்டிருந்தது.

ஒப்பம்/ டப்ளியு.பீ.சீ. விக்ரமரத்ன

கணக்காய்வாளர் அதிபதி

கணக்காய்வு விசாரணைகளுக்கான பதில்கள்

தேசிய போக்குவரத்து மருத்துவ நிர்வாகத்தின் 2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவுற்ற வருடத்திற்கான நிதி கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட ரீதியான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவை பற்றி 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத்தைக் கொண்ட தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை

1.2 முனைப்பழிவுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) 2022/12/31 ஆம் திகதியில் உள்ளவாறு 228044 ஆம் கணக்கிற்கு உரிய நிலுவை ரூபா 1,840,780.73 ஆகும். காசு புத்தகத்தில் ரூபா 13,883,347 நிலுவை காணப்பட்ட போதிலும் எந்த ஒரு நிலையிலும் வங்கியின் நடைமுறைக் கணக்கில் மேலதிகப் பற்று நிலுவை பேணப்படுவதில்லை. எமது நிறுவனத்தினால் இதுவரை மேலதிகப் பற்று வசதி பெறப்படவில்லை. அதேவேளையில், மேலதிகப் பற்று வட்டியும் செலுத்தப்படவில்லை. நடைமுறைக் கணக்கில் மேலதிக தொகையை வைத்திருப்பது எப்போதும் நடைமுறை சாத்தியமற்றதாக இருக்கின்ற அதேவேளையில், அந்த மிகையான தொகை குறுகிய கால முதலீடான சுநிழகளில் முதலீடு செய்யப்பட்டு வட்டி பெறப்படுகிறது. காசோலைகள் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட பின்னர் மாத்திரம் வங்கி கணக்கு நிலுவைகளை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

(ஆ) இலங்கை வங்கியில் உள்ள இரண்டு (02) நிலையான வைப்பின் முதலீட்டு திகதியாக எமது நிறுவனத்தில் உள்ள ஆவணத்தில் காட்டப்பட்டிருப்பது 2022.08.27 ஆம் தேதியாக இருக்கின்ற போதிலும் நிலையான வைப்பில் குறிப்பிடப்பட்டிருப்பது 2022.10.27 எனும் திகதியாகும். அதனால் கிடைக்க வேண்டிய வட்டித் தொகையை கணக்கிடும் போது 60 நாட்கள் மேலதிக வட்டித் தொகையை கணக்கிட்டு வருடத்தில் கிடைக்க வேண்டிய வட்டியாக குறிப்பிட்டு வருடத்திற்கு உரிய இலாபத்துடன் சீராக்கும் செய்யப்பட்டுள்ளது.

ஆனால், 2023.08.27 ஆம் திகதி இந்த நிலையான வைப்பு முதிர்வடைகின்ற திகதியாக இருக்கின்றபடியினால் உண்மையான வட்டி 2023 ஆம் ஆண்டின் இலாபத்திற்கு சீராக்கும் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். அப்போது 2022 ஆம் ஆண்டில் அதிகரித்துள்ள இலாபம் 2023 ஆம் ஆண்டில் உண்மையான இலாபத்திற்கு சீராக்கும் செய்யப்படுகின்றபடியினால் 2023 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் திரண்ட இலாபத்தை சரியாக கணக்கிடுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன்.

(இ) கட்டிடத்தின் பெறுமதி ரூபா10,843,201 கட்டிடக் கணக்கில் பற்று வைக்கப்பட்டுள்ள போதிலும், நிலையான சொத்துகள் பதிவேட்டில் உள்ளிடப்படவில்லை. எனவே ரூபா. 271,080 தேய்மானத்தின் அளவு கணக்கு வைக்கப்படவில்லை. 2023 ஆம் ஆண்டில் திரட்டப்பட்ட இலாபம் மற்றும் திரட்டப்பட்ட தேய்மானத்துடன் சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன்.

(ஈ) 2 முதல் 5 ஆண்டுகள் வரையில் கிடைக்க வேண்டிய கணக்குகள் ரூபா 3,395,903 தொகையில்ரூபா 3,000,000 மாத்திரமே இதுவரை அறவிடப்பட்டுள்ளது.

ஆனால் 5 ஆண்டுகளுக்கும் மேலாக இருந்து வருகின்ற ரூபா 9,190,238 இலங்கை போக்குவரத்துச் சபையிடமிருந்து அறவிட வேண்டிய தொகையை அறவிடுவது சம்பந்தமாக பின்வரும் உத்தியோகத்தர்களைக் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன், இந்தக் குழுவின் கலந்துரையாடல்கள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

குழு உறுப்பினர்கள்

1)	திரு. டி.ஜி. லக்‘மன், பணிப்பாளர் (நிர்வாகம்/ நிதி) தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகம்	-	குழுத் தலைவர்
2)	திரு. பி.கே.டி.எம். குணசேன, பிரதான உள்ளகக் கணக்காய்வாளர்போக்குவரத்து அமைச்சு	-	உறுப்பினர்
3)	திரு. எஸ்.பி.ஏ.எஸ். திசாநாயக்க, கணக்காளர் தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகம்	-	உறுப்பினர்
4)	திரு. எல்.எம். ஜயலத், உள்ளகக் கணக்காய்வாளர் தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகம்	-	உறுப்பினர்
5)	திரு. எச்.எம். சந்தன குமார ஹேரத், பிரதம நிதி முகாமையாளர்இலங்கை போக்குவரத்து சபை	-	உறுப்பினர்

எதிர்காலத்தில் இந்த அறவிட வேண்டிய தொகையை தீர்த்து வைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

2. ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குமுறை தேவைகள் பற்றிய அறிக்கை

2.2.2

(அ) இந்த ரூபா 1,513,150,579 என்பது நிலையான வைப்பு மற்றும் திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்யப்பட்டு பல ஆண்டுகளுக்கு முன்பிலிருந்து இருந்துவரும் தொகையாகும். இது புதிய முதலீடு அல்ல. எதிர்காலத்தில் முதலீடு செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் முதலீடுகளுக்கு அனுமதியை பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. எனினும், நிறுவனத்தின் மிகையான தொகை இலங்கை வங்கி மற்றும் தேசிய சேமிப்பு வங்கி போன்ற அரசாங்க வங்கிகளில் மட்டுமே முதலீடு செய்யப்படுகிறது. இந்த முதலீடுகளுக்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் கிடைத்துள்ளது.

(ஆ) தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகம் என்பது, திறைசேரியிலிருந்து நிதி ஏற்பாட்டைப் பெறாத ஒரு சுயாதீனமான வருவாய் உருவாக்கும் நிறுவனமாகும். எனவே தற்போது நிலவும் பொருளாதார நிலை காரணமாக 4மூ வட்டியுடன் மாதாந்த தவணை அடிப்படையில் சிறிய தொகை இடர் கடனாக வழங்கப்பட்டுள்ளது. மேலும், 2023 ஆம் ஆண்டு முதல் திருத்திக்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

(இ) மிக நீண்ட காலமாக இந்த பண்டிகை முறபணம் ஊழியர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றபடியினால் பணிப்பாளர் சபையின் அனுமதியின் பேரில் நிறுவன ஊழியர்களுக்கு இந்த பண்டிகை முறபணம் வழங்கப்பட்டது.

(ஈ) தற்போது, ஒப்பந்தம் முடிவடையும் திகதி வரை அதாவது 2023.08.06 வரை செயலாற்றுகை உத்தரவாதம் பெறப்பட்டுள்ளது.

2.3 ஏனைய விடயங்கள்

(அ) திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்யப்படும் பணத்தை எப்போதும் காசாக மாற்றிக் கொள்ள முடியாது. மேலும், அவை முதிர்வடைய முன்னர் காசாக்கப்பட்டால், அந்த நிறுவனத்திற்கு உரிய வட்டி வருமானம் கிடைக்காது. முதிர்வடைந்த அனைத்து நிலையான வைப்புத்தொகைகளிலும் ரூபா 140 மில்லியனுக்கு 20மூஇற்கும் அதிகமான வட்டி விகிதத்தின் கீழ் முதலீடு செய்யப்பட்டுள்ளன. இந்த ரூபா 33,499,620 மற்றும் ரூபா 35,000,000 ஆகிய தொகைகள் முதிர்வடைந்ததன் பின்னர் அதிக வட்டி விகிதத்தில் நிலையான வைப்புகளில் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) நிறுவனத்தில் நிரந்தர மருத்துவ உத்தியோகத்தர்கள் குறைவாகவே இருக்கின்றனர். நிரந்தர மருத்துவ உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு நீண்டகாலமாக பத்திரிகைகளில் விளம்பரம் செய்து முயற்சித்து வருகின்ற போதிலும், அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர்களின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை விட எமது நிறுவனத்தின் மருத்துவ உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படுகின்ற கொடுப்பனவுகள் குறைவாக உள்ளதால் நிரந்தர அடிப்படையில் மருத்துவ உத்தியோகத்தர்கள் நிறுவனத்தில் சேவைக்கு வர விரும்புவதில்லை. எனவே, ஒப்பந்த அடிப்படையிலும், நாளாந்த மணித்தியால நேர அடிப்படையிலும் மருத்துவ உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்பட்டு, சேவைநாடிகளுக்கு சிரமம் ஏற்படாத வகையில், தொடர்ந்து சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

(இ) நிறுவனத்திற்கான கட்டிடங்களைப் பெறுவதில், அரசாங்க கட்டிடங்களைப் பெறுவதற்கான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, அனைத்து மாவட்டச் செயலாளர்களுக்கும் கடிதங்கள் சமர்ப்பிக்கப்பட்டன, அங்கு பல மாவட்டச் செயலாளர்கள் தங்கள் மாவட்டத்தில் நிலமோ கட்டிடங்களோ இல்லை என்று தெரிவித்தனர். சில சமயங்களில், அரசு கட்டிடங்கள் இருப்பதை அடையாளம் கண்டுள்ள போதிலும், அந்த கட்டிடங்களை நாம் விரும்பும் விதத்தில் அமைக்க முடியாது. அரசாங்க செலவினச் சுற்றறிக்கையின் பிரகாரம், புதிய கட்டிடங்களுக்குப் பதிலாக ஏற்கனவே உள்ள கட்டிடங்களில் கிளை அலுவலகங்கள் நடாத்திச் செல்லப்படுகின்றன. எதிர்காலத்தில் அரச கட்டிடங்களை பெற்றுக்கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

2022 ஆம் ஆண்டில் செயலாற்றுகையை மேம்படுத்துவதற்காக பின்பற்றப்பட்ட நடவடிக்கைகள்

- தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகத்தின் களுத்துறைக் கிளையை 2022.03.15 ஆம் திகதியன்றுபிரதொரு இடத்தில் தாபித்தமை.
- மாதாந்த வாடகை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட திருகோணமலை கிளை அலுவலகத்தின் உள்ளக கட்டமைப்பை மாற்றியமைத்து நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகளை மேற்கொண்டு 2022 மே மாதம் 02 ஆம் திகதியன்று பிரிதொரு இடத்தில் தாபிக்கப்பட்டமை.
- தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகத்தின் மட்டக்களப்புக் கிளையை 2022.07.07 ஆம் திகதியன்று பிரதொரு இடத்தில் தாபித்தமை.
- தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகத்தின் கிளிநொச்சி கிளையை மாவட்ட செயலகத்திற்கு உள்ளேயே உள்ள கட்டடம் ஒன்றில் நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகளை மேற்கொண்டு 2022.08.02 ஆம் திகதியன்று தாபிக்கப்பட்டமை.
- தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகத்தின் மாத்தறைக் கிளையை 2022.09.02 ஆம் திகதியன்று பிரதொரு இடத்தில் தாபித்தமை.
- தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகத்தின் வவுனியா கிளையை வவுனியாமாவட்ட செயலகத்திற்கு உள்ளேயே உள்ள கட்டடம் ஒன்றில் தாபிப்பதற்காக நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகளை தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகத்தின் காலி கிளையை இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான கிந்தொட்டையில் அமைந்துள்ள டிப்போ வளவிலுள்ள கட்டடம் ஒன்றில் தாபிப்பதற்காக அது தொடர்பான நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- நுகேகொடை தலைமை அலுவலகத்தில் தற்போது காணப்படுகின்ற சாரதி மற்றும் பாதுகாப்பு ஓய்வு அறைக் கட்டடம் மிகவும் பாழடைந்த நிலையில் காணப்படுகின்றபடியினால் இந்தக் கட்டடத்தின் பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- வருகின்ற சேவைநாடிகளுக்கு மிகவும் வினைத்திறன்மிக்க மற்றும் தரமான சேவைகளை வழங்கும் நோக்கத்துடன் கிளை அலுவலகங்களுக்கு கதிரைகளை கொள்வனவு செய்தமை.
- நிறுவனத்தின் மனிதவலு மதிப்பீட்டிற்கு அமைவாக வெற்றிடமாக இருந்த பதவியணியை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
- கிளை அலுவலகங்களுக்கு விரல் அடையாள இயந்திரத்தைப் பொருத்துதல்
- இதுவரை நிறுவனத்தில் பயன்படுத்தப்பட்ட மருத்துவப் படிவத்தை இற்றைப்படுத்துதல்.
- மருத்துவ சேவை கட்டணத்தை திருத்துதல்
- நடவடிக்கைமுறை கோவையை தயாரித்தல்
- ஊழியர்களின் கோரிக்கையை கவனத்தில் கொண்டு நிறுவனத்தில் உள்ள பெரும்பாலான ஊழியர்களுக்கு அவர்களில் வதிவிடத்திற்கு அண்மையிலுள்ள கிளை அலுவலகங்களுக்கு இடமாற்றங்களை வழங்கியமை.
- ஊழியர்களின் திறன்விருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்

தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகம்

நிதி நிலைமைக் கூற்றுக்கள்

2022 டிசம்பர் 31 இல் முடிவுற்ற வருடத்திற்கானது

	குறிப்பு	2022 ரூபா	2021 ரூபா
சொத்துக்கள்			
நடைமுறையல்லாத சொத்துக்கள்			
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம்	4	254,842,153.04	249,462,916.83
நடந்துகொண்டிருக்கும் வேலை - நிர்மாணம்		14,520,433.73	13,135,716.63
முதலீடுகள்	5	1,432,374,227.03	1,423,839,447.56
பணிக்கொடை நிதியத்திற்கான முதலீடு	6	80,776,352.46	84,310,436.75
மொத்த நடைமுறையல்லாத சொத்துக்கள்		1,782,513,166.26	1,770,748,517.77
நடைமுறைச் சொத்துக்கள்			
பொருட்பதிவேடு	7	38,179,067.12	47,190,671.74
கிடைக்க வேண்டிய கணக்குகள்	8	14,821,254.08	14,607,305.96
கிடைக்க வேண்டிய ஏனையவைகள்	9	239,921,144.18	106,627,775.72
காசு மற்றும் காசுக்குச் சமனானவை	10	3,201,050.85	4,384,466.00
மொத்த நடைமுறைச் சொத்துக்கள்		296,122,516.23	172,810,219.42
மொத்தச் சொத்துக்கள்		2,078,635,682.49	1,943,558,737.19
மூலதனம் மற்றும் ஒதுக்கம்			
மூலதனம்		62,099,697.33	62,099,697.33
பொது ஒதுக்கம்		22,682,287.89	22,682,287.89
திரண்ட இலாபம்		1,803,958,884.53	1,666,741,187.57
மொத்த உரிமைப் பங்கு		1,888,740,869.75	1,751,523,172.79
நடைமுறையல்லாத பொறுப்புக்கள்			
பணிக்கொடை நிதியத்திற்கான ஏற்பாடு	11	117,041,805.00	110,136,981.25
நம்பிக்கை நிதியத்திற்குச் செலுத்த வேண்டியவை	11	114,976.26	114,976.26
		117,156,781.26	110,251,957.51
நடைமுறைப் பொறுப்புக்கள்			
செலுத்த வேண்டிய கணக்குகள்	12	42,196,907.12	47,618,249.48
அட்டுறுச் செலவுகள்	13	14,573,516.33	15,513,165.84
செலுத்த வேண்டிய ஏனையவைகள்	14	15,854,818.03	18,652,191.57
		72,625,241.48	81,783,606.89
மொத்த உரிமைப்பங்கு மற்றும் பொறுப்புக்கள்		2,078,522,892.49	1,943,558,737.19

தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகத்தின் நிதிக் கூற்றுக்கள் இலங்கை அரச துறைக் கணக்கீட்டுத் தரங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பதை சான்றுப்படுத்துகிறேன்.

T. G. Lakshman
Director (Admin / Finance)
National Transport Medical Institute
170, High Level Road,
Nugegoda

கணக்காளர் பணிப்பாளர் சபை (நிருவாகம் மற்றும் நிதி)

30 முதல் 31 வரையான பக்கங்களிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் 32 முதல் 44 வரையான பக்கங்களிலுள்ள நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகளும் இந்த நிதிக் கூற்றுக்களுக்கு அவசியமான பகுதியாகும். இந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு சபையின் பணிப்பாளர் பொறுப்பாக இருக்கின்றார். சபையின் சார்பில் ஒப்பமிடப்பட்டது.

J. A. D. B. Abeyrathna
Chairman
National Transport Medical Institute
No. 170, High Level Road,
Nugegoda.
Chairman / CEO

தலைவர் ∴ பி"நி"உ"

Nilan Miranda
Director General
National Transport Commission
Board of Director

பணிப்பாளர் சபை

தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகம்
நிதிச் செயலாற்றுகைக் கூற்று
2022 டிசம்பர் 31 இல் முடிவுற்ற வருடத்திற்கானது

வருமானம்	குறிப்பு	2022 ரூபா	2021 ரூபா
பிரதான மருத்துவச் சேவை வருமானம்	15	982,257,989.00	635,658,510.00
மருந்தகத்திலிருந்து கிடைத்த இலாபம்	23	81,703.41	(374,188.12)
கடன் வட்டி	17	1,830,408.78	1,156,792.95
நி. வைப்பு மற்றும் தி.பிணை மீதான வட்டி	18	200,095,080.77	80,261,798.55
ஏனைய வருமானம்	19	439,667.94	447,676.43
மொத்த வருமானம்		1,184,704,849.90	717,150,589.81
செலவுகள்			
நிருவாகச் செலவுகள்	20	436,779,784.63	369,707,703.01
நிறுவனத்தின் செலவுகள்	21	311,557,705.91	212,363,712.35
ஏனைய செலவுகள்	22	13,568,667.86	11,536,688.30
ஏனைய செலவுகள்		761,906,158.40	593,608,103.66
தேறிய இலாபம்		422,798,691.50	123,542,486.15

30 முதல் 44 வரையான பகுதிகளிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் நிதிக் கூற்றின் ஒரு முழுமையான பகுதியாகும்.

தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகம்

உரிமை மாற்றக் கூற்றுக்கள்

2022 டிசம்பர் 31 இல் முடிவுற்ற வருடத்திற்கானது

	மூலதனம்	பொது ஒதுக்கம்	திரட்டிய இலாபம்/(நட்டம்)	மொத்தம்
2021 சனவரி 1 இல் உள்ளவாறு மீதி	62,099,697.33	22,682,287.89	1,653,198,701.42	1,737,980,686.64
2021 காலப்பகுதிக்கான தேறிய இலாபம்	-	-	123,542,486.15	123,542,486.15
திறைசேரியின் திரண்ட நிதியத்திற்கான பங்களிப்பு	-	-	(110,000,000.00)	(110,000,000.00)
2021 டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி	62,099,697.33	22,682,287.89	1,666,741,187.57	1,751,523,172.79
2022 சனவரி 1 இல் உள்ளவாறு மீதி	62,099,697.33	22,682,287.89	1,666,741,187.57	1,751,523,172.79
முன்னைய வருட சீராக்கம்	-	-	4,419,005.46	4,419,005.46
2022 காலப்பகுதிக்கான தேறிய இலாபம்	-	-	422,798,691.50	422,798,691.50
திறைசேரியின் திரண்ட நிதியத்திற்கான பங்களிப்பு	-	-	(290,000,000.00)	(290,000,000.00)
2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி	62,099,697.33	22,682,287.89	1,803,958,884.53	1,888,740,869.75

தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகம்

காசுப் பாய்ச்சல் கூற்றுக்கள்

2022 டிசம்பர் 31 இல் முடிவுற்ற வருடத்திற்கானது

	2022	2021
	ரூபா	ரூபா
செயற்பாட்டு நடவடிக்கைகளின் பணப்பாய்ச்சல்		
சாதாரண விடயங்களின் தேறிய இலாபம்/ (நட்டம்)	422,798,691.50	123,542,486.15
தேய்மானத்திற்கான சீராக்கம்	34,906,687.66	28,326,923.65
பணிக்கொடைக்கான ஏற்பாடு	10,375,166.25	9,062,721.00
முதலீட்டின் மீதான வட்டி	(200,095,080.77)	(80,261,798.55)
வேலை மூலதனக் கட்டணத்திற்கு முன்னரான செயற்பாட்டு இலாபம்	267,985,464.64	80,670,332.25
